**செய்தி வெளியீடு எண்: 638** **நாள்:20.08.2021**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.V செந்தில்பாலாஜி மற்றும் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் ஆகியோர் வடசென்னை அனல் மின் நிலையத்தில் உள்ள நிலக்கரி கிடங்குகளை ஆய்வு செய்தனர்**

இன்று (20.08.2021) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.V செந்தில்பாலாஜி அவர்கள், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்களுடன், திருவள்ளூர் மாவட்டம், அத்திப்பட்டு, வடசென்னை அனல் மின் நிலையத்திலுள்ள நிலக்கரி கிடங்குகளை நேரில் சென்று ஆய்வு செய்தார். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஜெ.கோவிந்தராஜன், மேலாண்மை இயக்குநர் திரு.எஸ்.சண்முகம் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் உடனிருந்தனர்.

கப்பல் மூலம் கொண்டு வரப்படும் நிலக்கரி வட சென்னை அனல் மின் நிலையம் – 1ல் உள்ள உள் ஒதுக்கீடு மற்றும் வெளி ஒதுக்கீடு கிடங்குகளில் சேமிக்கப்பட்டு வருகிறது. வெளி ஒதுக்கீடு கிடங்கில் உள்ள நிலக்கரிகள் இரயில் மூலம் மேட்டூர் I மற்றும் II அலகு அனல் மின் நிலையங்களின் பயன்பாட்டிற்காக எடுத்துச் செல்லப்படுகிறது. உள் ஒதுக்கீடு கிடங்கிலிருந்து வடசென்னை அனல் மின் நிலையம் I மற்றும் II அலகு பயன்பாட்டிற்காக அனுப்பிவைக்கப்படுகிறது.

பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

நமது அரசு என அனைத்து தரப்பட்ட மக்களுக்கும் அனைத்து திட்டங்களையும் வழங்கி நல்லாட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி

அவர்களின் வழகாட்டுதலின்படியும், 100 நாட்களை கடந்து மின்சார வாரியத்தில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றோம். அதில், போற்றுதலுக்குரிய நிகழ்ச்சி வடசென்னை அனல் மின் நிலையம் அலகு–1, 100 நாட்களை கடந்து தொடர் மின்சார உற்பத்தியை செய்து சாதனை படைத்து வருகிறது. இந்த சாதனை கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன்பாக, அதாவது 2013–14–க்கு பிறகு 100 நாட்களைத் தாண்டி தொடர் மின்சார உற்பத்தியினை செய்து வருகிறது. இந்த உற்பத்திக்கு உறுதுணையாக இருந்த எங்களுடைய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், வடசென்னை அனல் மின் நிலைய தலைமைப் பொறியாளர் உட்பட அனைத்து அலுவலர்களுக்கும் மின்வாரியத்தின் சார்பாக வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேரத்தில் ஒரு வருத்தப்படக் கூடிய செய்தி, நிலக்கரி கிடங்கில் இருப்பு சரிபார்க்கப்பட்டது. அப்படி சரிபார்க்கப்பட்டதில் வடசென்னை அனல் மின் நிலையத்தில் மட்டும் 2 இலட்சத்து 38 ஆயிரம் டன் நிலக்கரி பதிவேட்டில் உள்ளதற்கும் இருப்பில் உள்ளதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இந்த இருப்பை சரிபார்க்க கூடிய பணியை இயக்குநர் (உற்பத்தி), இயக்குநர் (விநியோகம்) மற்றும் தலைமை நிதி கட்டுப்பாட்டு அலுவலர் ஆகிய மூன்று பேர் சேர்ந்து கடந்த 6 மற்றும் 9ந்தேதியும் ஆய்வு செய்தனர். அந்த ஆய்வின் அடிப்படையில் 2 இலட்சத்து 38 ஆயிரம் டன் நிலக்கரி இருப்பில் இல்லை என்ற தகவல் வரப்பெற்றுள்ளது.

இது முதற்கட்ட ஆய்வு. தொடர்ந்து முழுவதுமாக ஆய்வு செய்து என்னென்ன முறைகேடுகள் நடந்திருக்கின்றன, எப்படி இந்த நிலக்கரி இருப்பு பதிவேட்டில் இருப்பதற்கும், கையிருப்பில் இருப்பதற்கும் வித்தியாசம் வருகிறது. இதில் என்ன தவறு நடந்திருக்கிறது என்பதை முழுவதுமாக கண்டறியப்பட்டு நிச்சயம் தமிழ்நாடு அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோல், தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்களில் ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆய்வின் அறிக்கை பெற்றவுடன் அதன் உண்மை நிலவரங்கள் தெரிவிக்கப்படும்.

இந்த இருப்பு விவரம் 31.03.2021 வரை பதிவேட்டில் எடுக்கப்பட்ட கணக்குகளின் அடிப்படையில் 2 இலட்சத்து 38 ஆயிரம் டன் நிலக்கரி இருப்பில் இல்லாமல் இருக்கிறது. இதனுடைய மதிப்பு ரூபாய் 85 கோடி இருக்கும். மேதகு ஆளுநர் உரையில் கடந்த சில ஆண்டுகளாக மின்வாரிய நிர்வாகத்தில் ஏற்பட்ட குளறுபடிகள் ஆய்வு செய்யப்படும் என மிகத் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, யார் தவறு செய்தாலும் தண்டிக்கப்படுவார்கள், யாரும் தவறுகளிலிருந்து தப்பிக்க முடியாது. நல்ல உழைக்ககூடிய அதிகாரிகள், மின்வாரியத்தில் சிறப்பாக செயல்படுகிறார்கள் அவர்களுடைய உழைப்பெல்லாம் வீணடிக்கப்பட்டு சீர்கெட்ட நிர்வாகத்தால் 1 இலட்சத்து, 59 ஆயிரம் கோடி கடன் ஏற்பட்டுள்ளது. பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மின் கட்டணம் சரியான வகையில் மின் உற்பத்தி செய்யப்பட்டு ஏழை மக்களுக்கு வழங்க, சேவை செய்யக்கூடிய வாரியத்தில் இவ்வளவு பெரிய தவறுகள், முறைகேடுகள் நடந்து இருக்கிறது. கடந்த கால அரசில் மோசமான நிர்வாகம் நடந்து இருக்கிறது. அப்படிப்பட்ட மோசமான நிலையிலிருந்து நிர்வாகத்தை மீட்டெடுத்து, வரக்கூடிய காலங்களில் தவறுகள் அனைத்தும் களையப்பட்டு வெளிப்படையான நிர்வாகத்தை மக்களிடம் மின்வாரியம் முன்னெடுக்க இருக்கிறது, இது தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்திரவு.

3 ஆயிரம் மில்லியன் யுனிட் பயன்படுத்தி மின்வாரியத்திற்கு செலுத்திய கட்டணத்தை விட 4,400 மில்லியன் யுனிட் பயன்படுத்தப்பட்டு கூடுதலாக 80 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மின்வாரியத்தின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் தமிழகத்தில கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மின்வாரியத்தின் மூலம் அவர்கள் மீது சுமைகளை சுமத்தக் கூடாது என்பதற்காக கூடுதல் வைப்பு தொகை வசூலிக்க வேண்டாம் என உத்திரவு வழங்கி இந்த ஆண்டு அந்த கூடுதல் வைப்புத் தொகை வசூலிக்கப்படவில்லை. இதனால் அந்த மின்கட்டணத்தின் உயர்வுகள் தவிர்க்கப்பட்டுள்ளன. நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது பொதுவான செய்திகளை தயவுசெய்து வெளியிடாதீர்கள். எந்த மின் இணைப்பில் கூடுதல் கட்டணம் வரப்பெற்றுள்ளது என்பதை தெரிவித்தால் நேரடி கள ஆய்வில் ஈடுபட்டு அதற்கு தீர்வு காணப்படும். அனைத்து மின்நுகர்வோர்களுக்கும் நான் சொல்லிக்கொள்வது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட மின்நுகர்வார் சேவை மைய எண் 94987 94987க்கு தொடர்பு கொண்டு உங்களுடைய மின் கட்டணம் தொடர்பான புகாரை

தெரிவித்தால் விரைந்து மின்வாரியம் நடவடிக்கை எடுக்கும். 234 தொகுதிகளிலும் குறைவான மற்றும் உயர் மின் அழுத்தம் குறித்து கணக்கெடுக்கப்பட்டுள்ளது. 8900 மின்மாற்றிகள் மாற்றியமைப்பதற்கு ரூ.625 கோடி மதிப்பில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. 3 மாதத்தில் இப்பணிகள் நிறைவடைய உள்ளது. புதிய மின்மாற்றிகள் அமைத்தால் தான் சீரான மின் விநியோகத்தை வழங்க முடியும். மின்வாரியத்தில் மோசமான நிலையினை கடந்த கால அரசு விட்டுச் சென்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரசு 100 நாட்களில் பல்வேறு வழிவகைகளில் மின்வாரியத்திற்கு பல்வேறு உத்திரவுகளை வழங்கி சீரமைக்கப்பட்டு வருகிறது.

நான் இதுவரை 5 ஆய்வுக்கூட்டங்களை நடத்தி முடித்தியிருக்கிறேன். ஒவ்வொரு ஆய்வுக் கூட்டங்களிலும் பத்திரிகையாளர் சந்திப்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்திரவின் அடிப்படையில் எந்த இடங்களிலும் பொதுமக்களிடமிருந்து மின்மாற்றிகள் அமைக்க பணம் வசூலிக்க கூடாது, மின்வாரியமே அச்செலவுகளை ஏற்றுக்கொள்ளும் என்பதை கூறியுள்ளேன். பத்திரிக்கையாளர்கள் சொல்லக்கூடிய புகார்களை சமூக வளைத்தளங்களில் பதிவு செய்வதற்கு முன் அதை உறுதி செய்த பின் பதிவிடலாம். இதுவரைக்கும் மின்னகத்தில் 2 இலட்சத்து, 48 ஆயிரம் புகார்கள் வரப்பெற்றுள்ளது, இதில் 2 இலட்சத்து, 36 ஆயிரம் புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இன்னும் 12 ஆயிரம் புகார்கள் தான் ஆய்வில் உள்ளது. 93 சதவிகிதம் புகார்களுக்கு தீர்வு காணப்பட்டு விரைந்து நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**